මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
MINISTRY OF FINANCE, ECONOMIC STABILIZATION AND NATIONAL POLICIES

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව | செயலகம், கொழும்பு 01. இலங்கை. | The Secretariat, Colombo 01. Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: DFD/pawning loans/2024
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2024.07.31

*சுற்றறிக்கை இல. : DFD/ 2024- 2*

பொது முகாமையாளர், இலங்கை வங்கி
பொது முகாமையாளர், மக்கள் வங்கி
பொது முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி
பொது முகாமையாளர், பிரதேச அபிவிருத்தி வங்கி
பொது முகாமையாளர், இலங்கை சேமிப்பு வங்கி
பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர், இலங்கை வீடமைப்பு, அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர், அமானா வங்கி
பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்,கொமர்ஷல் வங்கி
பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர், டீஎவ்சீசீ வங்கி
பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர், ஹட்டன் நெஷனல் வங்கி
பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்,தேசிய அபிவிருத்தி வங்கி
பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்,நேஷன் ட்ரஸ்ட் வங்கி
பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர், பான் ஏசியா வங்கி
பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர், சம்பத் வங்கி
பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர், சணச அபிவிருத்தி வங்கி
பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்,சேலான் வங்கி
பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர், யூனியன் வங்கி

*ஐயா/அம்மணி,*

## உரிமம் பெற்ற வங்கிகளில் தங்க நகைகளை அடகு வைத்துள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்

வங்கிகளில் தங்க நகைகளை அடகு வைத்துள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்குதல் எனும் தலைப்பிலான *2024.07.22* ஆம் திகதிய *24/1433/604/158* எனும் இலக்கத்தை கொண்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான *2024.07.22* ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானம் தொடர்பானது. அதன் பிரகாரம், அஸ்வெசும பயனாளிகளினால் உரிமம்பெற்ற வங்கிகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அடகு முற்பணத்திற்காக வட்டி நிவாரணம் ஒன்றை வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது. அதன் பிரகாரம், *2024* ஆகஸ்ட் மாதம் *01* ஆம் திகதியிலிருந்து செயல் வலுப்பெறும் விதமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாட்டு வழிகாட்டல்களுக்கு இணங்கியதாக இந்நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு தொடர்புடைய உரிமம்பெற்ற வங்கிகளுக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது.

### 1. தகைமை பெறுகின்ற வாடிக்கையாளர்கள் மற்றும் அடகு முற்பணம்

1.1 இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு அஸ்வெசும பயனாளிகள் மாத்திரமே தகைமை பெறுகின்றனர். அதற்கு அமைவாக வாடிக்கையாளர்கள் அஸ்வெசும பயனாளிகள் குடும்பமொன்றின் உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

1.2 உரிமம் பெற்ற வங்கிகளிலிருந்து (உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற விசேட வங்கிகள் ஆகிய இரண்டு வகையும்) தனிப்பட்ட வாடிக்கையாளர்களால் பெறப்பட்ட ரூபா 100,000 ஐத் தாண்டாத அடகு வைப்பு முற்பணத்திற்கு வட்டி மானியமொன்று பொதுத் திறைசேரியினால் வழங்கப்படும்.

1.3 ஒரு வாடிக்கையாளர் இந்நன்மையை உரிமம் பெற்ற ஒரு வங்கியிலிருந்து மாத்திரம் பெறக் கூடியதாக இருக்கின்ற அதேவேளையில் அதிகபட்சமாக அடகு வைப்பு முற்பணம் ரூபா 100,000 மாத்திரமே ஆகும். அதற்கு அமைவாக ஒரே வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அடகு முற்பண எண்ணிக்கைகளைக் கவனத்தில் கொள்ளாது அதிகபட்சமாக மொத்த அடகு முற்பணத் தொகை ரூபா 100,000 வரை வாடிக்கையாளர் இந்நிவாரணத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

1.4 2024 ஜூன் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரிமம்பெற்ற வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட அடகு முற்பணங்கள் மட்டுமே இந்நிகழ்ச்சித் திட்டத்தில் கவனத்திற் கொள்ளப்படும்.

1.5 2024 ஜூன் 30 இல் உள்ளவாறு செயலாற்றுகை வகுதிக்குள் (Performing Category) வரும் அடகு முற்பணங்கள் மாத்திரம் இந்நிகழ்ச்சித் திட்டத்திற்குத் தகுதியானவை ஆகும்.

1.6 அதன் பிரகாரம், 2024 ஜூன் 30 இல் செயல்படாத வகுதியில் காணப்பட்ட (Non-Performing Category) அடகு வைத்த முற்பணங்கள் இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு தகைமை பெறமாட்டாது.

1.7 மேலே 1.5 இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்படு வகுதியில் காணப்பட்ட அடகு முற்பணமொன்று முதிர்வடைந்ததன் பின்னர் வாடிக்கையாளரினால் மீண்டும் புதுப்பிக்கப்படுமாயின், ஒரு தடவை புதுப்பித்தலுக்கு மாத்திரம் இந்நிகழ்ச்சி திட்டத்தில் தகைமை பெறும். எவ்வாறாயினும், புதிய அடகு முற்பணத்தின் பெறுமதி முன்னைய அடகு முற்பண பெறுமதியிலும் பார்க்கக் குறைவாகவோ அல்லது சமனாகவோ இருக்குமாயின் மாத்திரம் இந்நிவாரணம் கிடைக்கும்.

## 2. தொடர்புடைய வட்டி நிவாரணம் மற்றும் காலம்

2.1 ஆண்டுக்கு அதிகபட்சமாக 10% சதவீதத்திற்கு உட்பட்ட வட்டி மானியம் பொதுத் திறைசேரியினால் அபிவிருத்தி நிதி திணைக்களத்தின் ஊடாக அந்தந்த வங்கிகளுக்கு வழங்கப்படும்.

2.2 அதன் பிரகாரம் தொடர்புடைய வங்கி வட்டி வீதம் வருடத்திற்கு 10% சதவீதத்திலும் பார்க்க அதிகமாயின் வருடாந்த வட்டி நிவாரணம் 10% சதவீதம் ஆகும். அதற்கு அமைவாக தொடர்புடைய வங்கி வட்டி வீதத்திற்கும் நிவாரணத்திற்கும் இடையிலான வித்தியாசத்தை வாடிக்கையாளர் செலுத்துதல் வேண்டும்.

2.3 தொடர்புடைய வங்கி வட்டி வீதம் வருடத்திற்கு 10% சதவீதத்திலும் பார்க்க குறைவாக இருக்குமாயின் அல்லது சமனாக இருக்குமாயின் வட்டி நிவாரணம் தொடர்புடைய வங்கி வட்டி விதாசாரத்திற்கு சமனானதாக இருக்கும்.

2.4 வாடிக்கையாளர் ஒருவர் பின்வரும் விதமாக ஏதேனும் ஒரு கால எல்லைக்கு அவரால் செலுத்த வேண்டிய உரிய வட்டித் தொகையை செலுத்தியதன் பின்னர் மாத்திரம் பொது திறைசேரினால் அந்த காலத்திற்கு உரிய வட்டி நிவாரணம் வழங்கப்படும்.

- வாடிக்கையாளரினால் அடகு முற்பணத்தின் முழுமையாக உடன்படிக்கை செய்யப்பட்ட காலத்திற்கு உரியதாக அவர் செலுத்த வேண்டிய வட்டியை (2.2 மற்றும் 2.3 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) செலுத்தியதன் பின்னர்

- வாடிக்கையாளரினால் அடகு முற்பணத்தின் உடன்படிக்கை செய்யப்பட்ட காலத்தின் ஒரு பகுதிக்கு உரியதாக அவர் செலுத்த வேண்டிய வட்டியை (2.2 மற்றும் 2.3 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) செலுத்தியதன் பின்னர்

2.5 இந்த வட்டி நிவாரணம் 2024 ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதியிலிருந்து 2026 ஆம் ஆண்டு ஜூலை 31 ஆம் திகதி வரை அதிகபட்சமாக 2 வருட காலத்திற்கு மாத்திரம் வழங்கப்படுகின்றது. அதற்கு அமைவாக 2024 ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதிக்கு முன்னரான கால எல்லைக்கும் 2026 ஜூலை 31 ஆம் திகதிக்குப் பின்னரான கால எல்லைக்கும் வட்டி நிவாரணம் வழங்கப்படமாட்டாது.

3. **வட்டி நிவாரணத்திற்கு விண்ணப்பித்தல்**

3.1 வட்டி நிவாரண உரிமைக்கான விண்ணப்பப் படிவம் ( பின்னிணைப்பு 01), வங்கியினால் பொதுத் திறைசேரியின் அபிவிருத்தி நிதித் திணைக்களத்திற்கு மாதாந்தம் சமர்ப்பித்தல் வேண்டும்.

3.2 இவ்வட்டி நிவாரண உரிமைக்கான விண்ணப்பப் படிவம் தொடர்புடைய வங்கிகளின் உள்ளகக் கணக்காய்வினால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

4. **வாடிக்கையாளர்களைப் பதிவுசெய்தல்**

4.1 இந்நிவாரண நிகழ்ச்சித் திட்டம் சம்பந்தமாக வங்கியினால் மேலே 1.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்கின்ற சகல வாடிக்கையாளர்களுக்கும் தனிப்பட்ட முறையில் அறிவித்தல் வேண்டும்.

4.2 ஒவ்வொரு வாடிக்கையாளரும் தான் அஸ்வெசும நன்மைகளை பெறுகின்ற குடும்பத்தின் ஓர் உறுப்பினர் எனக் குறிப்பிட்டு தொடர்புடைய பிரதேச செயலகத்தின் ஊடாக உறுதிப்படுத்தும் கடிதம் ஒன்றை (பின்னிணைப்பு 02) சமர்ப்பித்தல் வேண்டும்.

4.3 இந்நிவாரண நிகழ்ச்சி திட்டத்திற்காக அவர் ஏனைய வங்கிகளில் விண்ணப்பிக்கவில்லை என்பதை உறுதிப்படுத்தி சத்தியக் கடதாசி ஒன்றை விண்ணப்பதாரரிடமிருந்து பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

5. **உள்ளக சுற்றறிக்கையை வெளியிடுதல்**

5.1 2024 ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் விதமாக இந்த நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மேற்குறிப்பிட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு உள்ளக சுற்றறிக்கை ஒன்றை வங்கியின் சகல கிளைகளுக்கும் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

இது சம்பந்தமாகத் தங்களது ஒத்துழைப்பை மிகவும் வேண்டுகிறேன்.

இப்படிக்கு உண்மையுள்ள,

ஒப்பம் :
கே. எம். மஹிந்த சிறிவர்தன
திறைசேரியின் செயலாளர்

பிரதி:

1. சனாதிபதியின் செயலாளர், - தகவலுக்காக
2. செயலாளர், பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவலகங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்
3. பணிப்பாளர் நாயகம், தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம் - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்
4. பணிப்பாளர் நாயகம், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்
5. பணிப்பாளர், வங்கி மேற்பார்வை திணைக்களம், இலங்கை மத்திய வங்கி - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்

பின்னிணைப்பு 1

**உரிமம் பெற்ற வங்கிகளில் தங்க நகைகளை அடகுவைத்த மக்களுக்கு நிவாரணம் வழங்குதல்**

வட்டி நிவாரணத்திற்கான கோரிக்கைப் படிவம்

வங்கியின் பெயர் :

வருடம் :

மாதம் :

| இம்மாதத்திற்குள் தகைமைபெற்ற மொத்த அடகு முற்பணங்களின் எண்ணிக்கை | இம்மாதத்திற்குள் தகைமைபெற்ற மொத்த வாடிக்கையாளர்களின் | இம்மாதத்திற்குள் வாடிக்கையாளர்கள் செலுத்திய மொத்த வட்டி ( ரூபா) | இந்த மாதத்திற்கான மொத்த வட்டி நிவாரணத் தொகை ( ரூபா) |
|---|---|---|---|
| | | | |

மேற்குறிப்பிட்ட தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் சான்றுப்படுத்துகிறோம்.

...................................................

அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் கையொப்பம்

.............................................

அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் பெயர்

.............................................

திகதி

அலுவலக இலச்சினை

.............................................

உள்ளகக் கணக்காய்வாளரின் கையொப்பம்

.............................................

உள்ளகக் கணக்காய்வாளரின் பெயர்

.............................................

திகதி

அலுவலக இலச்சினை

*பின்னிணைப்பு - 2*

*(வாடிக்கையாளரின் பெயர் மற்றும் முகவரி)*

..................................................

..................................................

..................................................

*20........../............./............*

*(வங்கியின் பெயர், கிளை மற்றும் முகவரி)*

*முகாமையாளர்*
......................... வங்கி
.........................................

.........................................

**<u>உரிமம் பெற்ற வங்கிகளில் தங்க நகைகளை அடகுவைத்த மக்களுக்கு நிவாரணம் வழங்குதல்</u>**

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நான் அஸ்வெசும நன்மைகளை பெறுகின்ற குடும்பத்தின் ஓர் உறுப்பினர் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்

வாடிக்கையாளரின் முழு பெயர் *:* .........................................

வாடிக்கையாளரின் தே.அ.அ.இல.*:* ...................................

வாடிக்கையாளரின் கையொப்பம்*:* ....................................

---

*(பிரதேச செயலகத்தினால் பூர்த்தி செய்வதற்காக)*

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள திரு/ திருமதி ...................................................... அஸ்வெசும நன்மைகளை பெறுகின்ற குடும்பத்தின் ஓர் உறுப்பினர் என்பதை சான்றுப்படுத்துகிறேன்.

பிரதேச செயலாளரின் கையொப்பம்*:*...........................................

பிரதேச செயலகம்*:* ................................................

திகதி*:* .............................

அலுவலக இலச்சினை*:*